ஸ்ரீ சக்தி செல்வ கணபதி துணை ஸ்ரீ முருகன் துணை
VIJAYA PRINTERS 97888 99977
Office 95973 79977
mecherivijayaflex2007@gmail.com
மேச்சேரி
விஜயா
டிஜிட்டல் பிளக்ஸ் பிரிண்டிங்
அரசியல், சினிமா, திருவிழா பேனர்கள் | கடைபோர்டுகள் | ஸ்டார் பிளக்ஸ்
வினையல் பிரிண்டிங் | விசிடிங்கார்டு | வால்போஸ்டர்
தருமபுரி மெயின் ரோடு, மயிலி சில்க்ஸ் அருகில், பஸ் நிலையம், மேச்சேரி

RNI. No.: TNTAM/2022/82166

# செய்தி நேரம்

SEITHI NERAM

மாதமிருமுறை இதழ்

அனைத்து கட்டுமானத் தேவைக்கும்! சேவைக்கும்!
SRIRAAM
ENGINEER & BUILDERS
● DESIGN ● CONSTRUCTION
● VASTU CONSULTANCY
Er. G.SETHURAMAN
Proprietor
No. 10, North Pillaiyar Kovil St.,Varaganeri, Trichy-620008
+91 98430 69121, +91 99523 99369

மலர் : 4 இதழ் : 21 2026 ஜனவரி 1-15 4 பக்கங்கள் விலை : ரூ. 10/-

# 100 நாள் வேலை திட்டத்தை முடக்கும் மத்திய அரசு?





## எதிர்ப்பலையில் தமிழகம்

100 நாள் வேலை உறுதி திட்டம் நீக்கப்பட்டு விட்டு விகாசித் பாரத் உத்தரவாத வேலைவாய்ப்பு திட்டம் (VB-G RAM G) என மத்திய அரசு கொண்டு வரப்போவதாக அறிவித்துள்ளது. இதற்கு மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிவிட்டு வேறு பெயரை வைத்ததற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில் இந்த புதிய திட்டம், பழைய 100 நாள் திட்டத்தில் இருந்து எப்படி வேறுபடுகிறது என்பதை காணலாம்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டம் (MGNREGA) விரைவில் முடிவுக்கு வரவுள்ளது. இதற்குப் பதிலாக, மத்திய அரசு 2025-ல் மக்களவையில் 'விக்சித் பாரத் ரோஜ்கர் மற்றும் ஆஜீவிகா மிஷன் (கிராமின்) உத்தரவாதம்' (VB-G RAM G) என்ற புதிய மசோதாவை அறிமுகப்படுத்த உள்ளது.

இந்த புதிய திட்டம், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வந்த 100 நாள் வேலை உறுதி திட்டத்தை ரத்து செய்து, வேலை வாய்ப்புக்கான புதிய விதிகளை அமல்படுத்தும் என சொல்லப் படுகிறது.

இந்த மசோதாவின் முக்கிய நோக்கம், 'விக்சித் பாரத் 2047' என்ற தேசிய தொலை நோக்கு பார்வையுடன் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் மேம்பாட்டை இணைப்பதாகும். இது வளமான இந்தியாவை உருவாக்குவதற்கான மத்திய அரசின் லட்சியத் திட்டம் என சொல்லப்படுகிறது. MGNREGA திட்டத்தை முழுமையாக மறு சீரமைக்கப்பட்ட ஒரு புதிய கட்டமைப்பால் மாற்றுவதற்கான அடித்தளத்தை அமைக்கிறது.

இதுகுறித்து மத்திய அரசு ஒரு அறிக்கையில் தெரிவித்ததாவது: 'கிராமப் புறத்தில் உள்ளவர்களுக்கு 125 நாட்கள் வேலைக்கு உத்தரவாதம் அளிக்கிறது.

இந்த சட்டம், வேலை வாய்ப்பை உருவாக்குவதுடன், நீடித்த ஊரக உள் கட்டமைப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட நான்கு முக்கியப் பிரிவுகளின் கீழ் இந்த பணிகள் மேற்கொள்ளப்படும்.

அவை: நீர் பாதுகாப்பு தொடர்பான பணிகள், இதன் மூலம் நீர்வளம் பெருகும். கிராமப்புற அடிப்படை உள்கட்டமைப்பு, வாழ்வாதாரம் தொடர்பான உள்கட்டமைப்பு மேம்பாடுகள் மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகளின் தாக்கத்தைக் குறைப்பதற்கான சிறப்புப் பணிகள் ஆகியனவாகும்.

புதிய சட்டம், உள்ளூர் அளவிலான, ஒருங்கிணைந்த திட்டமிடலை வலியுறுத்துகிறது. கிராம பஞ்சாயத்துகளால் உருவாக்கப்படும் 'விக்சித் கிராம பஞ்சாயத்து திட்டங்கள்,' மத்திய அரசின் PM கதி-சக்தி போன்ற தேசிய அமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்படும். இது நீர் பாதுகாப்பு, அடிப்படை ஊரக உள்கட்டமைப்பு, வாழ்வாதாரம், காலநிலை மாற்றம் ஆகியவற்றை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

இந்த சட்டம், நிறைய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், அதிக வருமானத்தை தந்து கிராமப்புற பொருளாதாரத்தை பலப் படுத்துகிறது. குறிப்பாக, நீர் தொடர்பான பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

உதாரணமாக, மிஷன் அம்ரித் சரோவர் (Mission Amrit Sarovar) ஏற்கனவே 68,000க்கும் மேற்பட்ட நீர்நிலைகளை புதுப்பித்துள்ளது. இது விவசாயம் மற்றும் நிலத்தடி நீர் மேலாண்மைக்கு உதவுகிரது

அத்தியாவசிய ஊரக உள்கட்டமைப்புகளான சாலைகள், கிராமப்புற வணிகச் செயல்பாடுகளையும் அதிகரிக்கும். 125 நாட்கள் வேலை, குடும்ப வருவாயை கணிசமாக அதிகரித்து, கிராமப் பொருளாதாரத்தை உயர்த்தும். வேலைத் தேடி வேறு மாநிலங் களுக்கோ மாவட்டங்களுக்கோ செல்வது அவசியமில்லாமல் போகும்.

இந்த திட்டத்தில் டிஜிட்டல் முறையில் வருகைப் பதிவு இருக்கும் என்பதால் பணப்பரிமாற்றம் செய்யும் போது வெளிப்படைத்தன்மை அதிகரிக்கும். ஊழலை தடுக்கும். 100 நாள் வேலை திட்டத்திற்கு செல்வதால் விவசாய வேலைக்கு ஆட்கள் இன்றி விவசாயிகள் தவிக்கிறார்கள். இந்த புதிய திட்டத்தின் மூலம் அறுவடை காலங்களில் ஊரக வேலை உறுதி திட்டத்தை 60 நாட்கள் நிறுத்திவிட்டால் விவசாய பணிகளுக்கு ஆட்கள் இல்லாத நிலை ஏற்படாது

உணவு உற்பத்திச் செலவுகளை அதிகரிக்கும் தேவையற்ற கூலி உயர்வைத் தடுக்கவும் உதவும். பயிர்களைப் பாதுகாத்து சேதங்களைக் குறைக்கும்.

125 நாட்கள் உறுதி செய்யப்பட்ட வேலை 25% அதிக சாத்தியமான வருவாயை அளிக்கும். 'விக்சித் கிராம பஞ்சாயத்து திட்டங்கள்' (Viksit Gram Panchayat Plans) மூலம் உள்ளூர் அளவில் திட்டமிடப் பட்ட முன்னரே கண்டறியப் பட்ட வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும்.

வேலை வழங்கப் படாவிட்டால் மாநிலங்கள் கட்டாயம் வேலையின்மைக்கான ஊக்கத்தொகையை வழங்க வேண்டும். மேம்படுத்தப்பட்ட சாலைகள், நீர் வசதிகளை உருவாக்குவதன் மூலம் தொழிலாளர்கள் பலன் பெறுவார்கள்.

100 நாள் வேலை திட்டமானது 2005 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனால் தற்போது இந்தியாவில் உள்ள கிராமங்கள் மாறிவிட்டன. கடந்த 2011 - 2012 ஆம் ஆண்டு 25.7 சதவீதமாக இருந்த வறுமைக் கோடு, 2023- 2024 ஆம் ஆண்டில் 4.86 சதவீதமாக குறைந்துள்ளது.

பழைய 100 நாள் திட்டத்தால் தற்போதைய கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது எனவே தான் புதிய திட்டத்தை அறிமுக படுத்துகிறோம் என மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அளவில் எளியோருக்கு வேலையும், அதன் வழி உரிய ஊதியமும் அளித்து வரும் வகையில் உருவாக்கப்பட்ட மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டத்தில் (MGNREGA) மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு.

இது எளிய மக்களின் மீது பா.ஜ.க அரசு கொண்டிருக்கிற வெறுப்பையும், காந்தியடிகளின் மீதுள்ள வன்மத்தையும் வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

இதனைக் கண்டித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டது பின்வருமாறு,

மகாத்மா காந்தி 100 நாள் வேலை உறுதித் திட்டத்தைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!

தேசத்தந்தை காந்தியடிகளின் மீதுள்ள வன்மத்தால் அவர் பெயரைத் தூக்கிவிட்டு, வாயில் நுழையாத வடமொழிப் பெயரைத் திணித்திருக்கிறார்கள்!

100% ஒன்றிய அரசின் நிதியில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்திற்கு இனி 60% மட்டுமே நிதி ஒதுக்குவார்களாம்!

இவை அனைத்துக்கும் மேலாக, நாட்டிலேயே வறுமையை முழுமையாக ஒழித்துச் சாதனை படைத்து உள்ளதற்காகவே நம் தமிழ்நாடு தண்டிக்கப்படவுள்ளது! வறுமை இல்லாத மாநிலம் என்பதற்காக, இருப்பதிலேயே குறைவாகத்தான் இத்திட்டத்தின் பயன்கள் தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைக்குமாம்!

பல கோடிப் பேரை வறுமையின் பிடியில் இருந்து மீட்டு, மாண்புடன் வாழ வழிவகுத்த ஒரு திட்டத்தை ஆணவத்துடன் அழிக்கப் பார்க்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

மூன்று வேளாண் சட்டங்கள், சாதிவாரி கணக்கெடுப்பு போன்றவற்றில் எப்படி பின்வாங்கினீர்களோ, அதேபோல MGNREGA-வைச் சிதைக்கும் முயற்சியிலும் மக்கள் உங்களை நிச்சயம் பின்வாங்க வைப்பார்கள்! எனவே, மக்களின் சீற்றத்துக்கு ஆளாகாமல் இப்போதே VBGRAMG திட்டத்தைக் கைவிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன், என குறிப்பிட்டுள்ளார்.

மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் பெயர் எவ்வித மாற்றமுமின்றி தொடர மத்திய அரசை வலியுறுத்துகிறேன் என்று

தொடர்ச்சி 2ம் பக்கம் பார்க்க...

எல்லா புகழும் இறைவனுக்கே!
NEWLIFE FOUNDATION
உங்கள் தொழில் வளர்ச்சிக்காக, ஊடகம் &பத்திரிக்கைகளில் விளம்பரங்கள் செய்யவும்
தனிநபர் மற்றும் குடும்பத்திற்கான ஆயுள் காப்பீடு, டூர்ஸ் & டிராவல்ஸ் கேட்டரிங் (சைவம் மற்றும் அசைவம்) இன்னிசை நிகழ்ச்சி ஆகியவை ஏற்பாடு செய்து தரப்படும்



குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன் வீட்டுமனைகள் மற்றும் தனிவீடு வாங்கவும் விற்கவும் மேலும் நெடுநாளான வீட்டு மனைகளை கண்டுபிடித்து அதை சுற்றி வேலியும் சிறப்பான முறயில் அமைத்து தருகிறோம் தேவைப்படுவோர் அணுகவும்
தமிழ்நாடு அரசின் அனைத்து வித இ-சேவை மைய செயல்பாடுகளும்சிறந்த முறையில் செய்து தரப்படும்
● DTCP APPROVAL
● PLAN APPROVAL
● LAYOUT APPROVAL
● BUILDING APPROVAL
● ONLINE EC / PATTA
● ONLINE TREASURY PAYMENT
● ARCHAEOLOGY NOC
● HOUSING LOAN
வக்ஃபு வாரியம் NOCயும் பெற்றுத் தரப்படும்
திருச்சி மாவட்டத்தில் பல்வேறு வியாதியிலும், ஆதரவற்ற நிலையிலும் உயிர் இழக்கும் அமரர்களை மரியதைக்குரிய காவல்துறை அனுமதியோடும், மதிப்பிற்குரிய மருத்துவர்கள் ஒப்புதலோடும் நல்லடக்கம் செய்யும்
அமரர் சேவை செய்வதே எமது பிரதான சேவை
தமிழகம் முழுவதும் இரத்ததான சேவை மற்றும் ஆம்புலன்ஸ் சேவை
இச் சேவைகள்அனைத்தும் [24X7] அணுகவும்
திருச்சி R.BLOODSAM
88836 88860 / 82203 14146


SRE SELVABANDHAM CHIT'S PVT LTD.,
செல்வம் செழிக்கட்டும்! பந்தம் நிலைக்கட்டும்!
உங்கள் சேமிப்பிற்கு பாதுகாப்பான அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம்!
இந்த புத்தாண்டில் உங்கள் முதல் சேமிப்பு செல்வபந்தத்துடன் இனிதே துவங்கட்டும்...
ஸ்ரீ செல்வபந்தம் சிட்ஸ் (பி) லிமிடெட்
SRI SELVABANDHAM CHITS PVT LTD
(U65992TN2022PTC152934)
எண்:49, ஜி.பி காம்ப்ளக்ஸ், இரண்டாம் தளம், கல்லுக்குழி, புதுக்கோட்டை மெயின் ரோடு, திருச்சி-01.
போன்: 0431-2903297, செல்: 7598940069

## தமிழ்நாடு அரசின்

# மக்களை தேடி மருத்துவம் திட்டம்!

### ஒரு சிறப்பு பார்வை

தமிழக அரசின் மக்களை தேடி மருத்துவ திட்டம் சாமானிய மக்களும் தரமான மருத்துவ சேவைகளை பெற வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பாக வருமுன் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ நலத்திட்டங்களை செயல்படுத்தப் பட்டு வருகிறது. அவற்றில் மிக முக்கியமான திட்டம் தான் மக்களை தேடி மருத்துவம் திட்டம்.

இந்த திட்டத்தின் மூலமாக சுகாதார பணியாளர்கள், கிராமப்புறங்களில் உள்ள வீடுகளுக்கு நேரடியாக சென்று, இலவசமாக நோய்களுக்கு பரிசோதனை செய்து மருந்துகளை வழங்குவார்கள்.

தமிழ்நாட்டில் தொற்று நோய்களை தடுக்கும் நோக்கில் தமிழக அரசு கொண்டுவந்துள்ள முன்னோடி திட்டமே மக்களை தேடி மருத்துவம் திட்டம். இந்த திட்டத்தை கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாமனப்பள்ளி என்ற கிராமத்தில் 2021 ஆகஸ்ட் 5 ஆம் தேதி அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்த திட்டத்தின் வாயிலாக மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் மூலம் நோயாளிகளின் வீடுகளுக்குத் தேடி சென்று மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது. இதன் மூலமாக தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்ற திட்டங்களில் இந்த மக்களை தேடி மருத்துவமும் ஒன்றாக கருதப்படுகிறது.

பெருகி வரும் தொற்றா நோய்களில் இருந்து மக்களை பாதுகாக்கவும், தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்ட சாமானிய மக்கள் மாதந்தோறும் உரிய மருத்துவ சேவையினை பெறவும், பாதிக்கப்பட்ட நோயாளிகளின் வீடுகளுக்கே நேரடியாக சென்று சுகாதார பணியாளர்கள் மூலமாக சிகிச்சை, மருந்து, மாத்திரைகளை வழங்குவது தான் மக்களை தேடி மருத்துவத்தின் அடிப்படை நோக்கமாகும்.

நகரப்புறங்களில் அரசு மருத்துவமனைகளும், கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களும் இருக்கின்றன. இருப்பினும், சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், டயாலசிஸ், சிறுநீரக தொற்று, புற்றுநோய் போன்ற நாள்பட்ட நோய்களால் பாதிக்கப் பட்டு உள்ள நோயாளிகளை அன்றாடம் சிகிச்சை அளித்து கண்காணித்துக் கொள்ள முடியாது.

அதுமட்டுமல்லாமல், இம்மாதிரியான நோய்களால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எனவே, தொற்றா நோய்களால் மக்கள் பாதிக்கப்படுவதை தடுப்பதற்காகவும், பாதிக்கப்பட்ட மக்களை பரிசோதனை செய்து நோயின் தாக்கத்தை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை, மருந்து, மாத்திரைகள் கிடைக்க செய்ய வேண்டும் என்பதற்காகவும் தமிழக அரசு இந்த முன்னோடி திட்டத்தை செயல்படுத்தி உள்ளது.

இந்த திட்டத்தின் வாயிலாக மக்கள் மருத்துவர்களை தேடி மருத்துவமனைக்கு சென்ற காலம் மாறி, மக்களை தேடி அவர்களின் வீட்டிற்கே மருத்துவ சேவை வரும் நிலை உருவாகி உள்ளது. இந்த திட்டத்தை தொற்றா நோய்களை தடுக்கும் திட்டம் என்றும் குறிப்பிடலாம். இந்த திட்டத்தால் மருத்துவ மனைக்கு செல்ல முடியாத, பண வசதி இல்லாத வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள், படுத்த படுக்கையாக இருப்பவர்கள் என பல்வேறு தரப்பினரும் பயன்பெற்று வருகின்றனர்.

மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு, உடல் நலக் குறைவு உள்ளவர்களுக்கும் அவர்களின் வீட்டிற்கே நேரடியாக சென்று பரிசோதனை செய்யப்படுகின்றன.

பரிசோதனை செய்யப் படுவதோடு, நோய்க்கான உரிய ஆலோசனை, சிகிச்சை, மருந்து மற்றும் மாத்திரைகள் அனைத்தும் இலவசமாகவே வழங்கப் படுகின்றன. இதன் மூலமாக சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், சிறுநீரக சம்பந்தமான பிரச்சனைகள், இதய நோய் போன்ற தொற்று அல்லாத நாள்பட்ட நோய்களை ஆரம்பக் கட்டத்தில் கண்டறியப் படுகின்றன.

கண்டறியப்படும் நோய்களுக்கு அதன் தீவிர தன்மையை பொறுத்து தேவையான அனைத்து ஆலோசனைகளும், சிகிச்சை முறைகளும் வழங்கப்படுகின்றன. அத்துடன், மாதந்தோறும் மருந்து மற்றும் மாத்திரைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

# பொங்கல் பரிசுத் தொகை ரேஷன் கார்டுக்கு ரூ.3,000?

## மகிழ்ச்சியில் தமிழக மகளிர்!



2026ஆம் ஆண்டின் பொங்கல் பண்டிகையை ஒட்டி பரிசுத் தொகுப்பு வழங்குவதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வரும் நிலையில் ரொக்கம் தொடர்பாக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

பொங்கல் பரிசுத் தொகுப்பு எப்போது கைக்கு கிடைக்கும்? என்பதை காட்டிலும் ரொக்கம் எவ்வளவு அறிவிக்கப் படும் என்ற எதிர்பார்ப்பு தான் பொதுமக்கள் பலரிடமும் எழுந்துள்ளது. ஏனெனில் 2025 பொங்கல் பண்டிகையின் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு ரொக்கம் ஏதும் வழங்கவில்லை. பச்சரிசி, சர்க்கரை, கரும்பு ஆகியவை அடங்கிய பரிசுத் தொகுப்பு மட்டுமே வழங்கப்பட்டது.

ஆனால் வரவிருக்கும் 2026ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை அவ்வளவு எளிதாக கடந்து செல்ல முடியாது. ஏனெனில் சட்டமன்றத் தேர்தல் வருகிறது. கூடவே ஆட்சிக்கு எதிரான மனநிலையில் இருப்பவர்களின் கொந்தளிப்பும் அதிகரித்து கொண்டிருக்கிறது. இத்தகைய விஷயங்களை கணக்கில் கொண்டு ரொக்கத் தொகை வழங்கினால் ஏதேனும் ஒருவகையில் சாதகமாக மாறும் என்று திமுக அரசு கருதுகிறது.

ரொக்கத் தொகையை பொறுத்தவரை அரிசி ரேஷன் கார்டு வைத்திருக்கும் அனைத்து குடும்பத்தினருக்கும் 5,000 ரூபாய் வழங்கப்படும் என்று முதலில் தகவல் வெளியானது. அதன்பிறகு 3,000 ரூபாய் வழங்க வாய்ப்பிருப்பதாக பேசப்படுகிறது. தமிழகத்தில் மொத்தம் 2.27 கோடி ரேஷன் கார்டுகள் இருக்கின்றன. இதில் அரிசி ரேஷன் கார்டுகள் மட்டும் 2.22 கோடி என்று கூறப்படுகிறது.

அப்படி பார்த்தால் 2.22 கோடி x ரூ.3,000 = ரூ.6,600 கோடி நிதி ஒதுக்க வேண்டிய சூழல் வரும். இதுதவிர இலவச வேட்டி, சேலையும் வழங்க திட்டமிடப்பட்டு கொள்முதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. தற்போது 1.77 கோடி வேட்டி, சேலைகள் கொள்முதல் செய்யப்பட்டு தயார் நிலையில் வைத்திருப்பதாக கூறப்படுகிறது. இதுதொடர்பான அறிவிப்பு எப்போது வெளியாகும் என்பது தான் கேள்விக்குறியாக இருந்து வந்தது.

ஏனெனில் பொங்கல் பண்டிகை தொடங்குவதற்கு முன்பாக அனைவருக்கும் பரிசுத் தொகுப்பு போய் சென்றடைய வேண்டும். அதற்கு சில வாரங்கள் முன்பாக நடவடிக்கையை தொடங்கினால் தான் சரியாக இருக்கும். நேற்றைய தினம் பொங்கல் பரிசு டோக்கன் அச்சிடும் பணிகள் தொடர்பாக முக்கியத் தகவல் வெளியானது.

வரும் ஜனவரி முதல் வாரத்திற்குள் டோக்கன் அச்சிடும் பணிகளை முடித்து தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். அதில் பரிசு தொகுப்பு பெற வேண்டிய நாள், நேரம் ஆகியவற்றை குறிப்பிட்டிருக்க வேண்டும்.

முதல் நாளில் காலை 100 பேர், மாலை 100 பேர் எனவும், அதற்கடுத்த நாளில் இருந்து 400 பேர் வீதம் பரிசு தொகுப்பு வழங்கும் வண்ணம் டோக்கன்கள் அச்சிட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்பிறகு வீடு வீடாக சென்று நியாய விலை கடை ஊழியர்கள் வழங்க வேண்டும். வேறு யாரும் இந்த பணியில் ஈடுபடக் கூடாது.

குறிப்பாக அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் டோக்கன் வழங்கக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டது. விரைவில் பொங்கல் பரிசுத் தொகுப்பு தொடர்பான அறிவிப்பை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிடுவார் என்று கோட்டை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகே புதிதாக வைக்கப்பட்டுள்ள சாலை தடுப்புகள்!

## நெரிசலால் அவதிப்படும் மக்கள்



திருச்சி மாவட்டத்தில் சத்திரம் பேருந்து நிலையம் அருகே காளியம்மன் கோயில் தெருவில் இருந்த சாலையோர வியாபாரிகளை அப்புறப்படுத்திய திருச்சி மாநகராட்சி, மீண்டும் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்க சாலை தடுப்புகளை அமைத்துள்ளது. ஆனால், இந்த நடவடிக்கை கலவையான விமர்சனங்களை பெற்றுள்ளது. குறுகலான இந்த சாலையில் தடுப்புகள் அமைப்பதால் போக்குவரத்து நெரிசல் மேலும் அதிகரிக்கும் என அப்பகுதி மக்கள் எச்சரித்துள்ளனர்.

காளியம்மன் கோயில் தெரு, வார்டு 13-ல் அமைந்துள்ளது. இது குடியிருப்புகளான தெப்பக்குளம் மற்றும் ராக்போர்ட்டை, நகரத்தின் முக்கிய பேருந்து நிலையமான சத்திரம் பேருந்து நிலையத்துடன் இணைக்கிறது. கடந்த மாதம், சாலையை ஆக்கிரமித்திருந்த சுமார் 60 சாலையோர வியாபாரிகள், பல அடுக்கு கார் நிறுத்துமிடம் மற்றும் நந்திகோயில் தெருவில் உள்ள சந்தைக்கு மாற்றப்பட்டனர். வியாபாரிகள் மீண்டும் திரும்புவதைத் தடுக்க, மாநகராட்சி, நகர போக்குவரத்து காவல்துறையுடன் இணைந்து காளியம்மன் கோயில் தெரு மற்றும் சங்கரன் பிள்ளை சாலையின் ஒரு பகுதியில், இருவழிப் போக்குவரத்தை சீரமைக்க கான்கிரீட் தடுப்புகளை அமைத்துள்ளது.

# மின்சார வாகனத்திற்கு 100% வரி விலக்கு!

## தமிழக அரசு அரசாணை!



நீண்ட காலத்தில் செலவுச்சுமை குறைந்து, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் ஒரு நிலையான போக்குவரத்து தீர்வாக மின்சார வாகனங்கள் பார்க்கப்பட்டு வருகின்றன.. இந்நிலையில், வாகன ஓட்டிகளுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் முக்கிய அறிவிப்பு ஒன்றை தமிழக அரசு தற்போது வெளியிட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதிப்பை தடுக்கும் விதமாகவும், பெட்ரோல், டீசலுக்கு பதிலாக பேட்டரியில் ஓடும் வாகனங்கள், சிஎன்ஜி எரிவாயுவில் இயங்கும் வாகனங்களை பயன்படுத்தும், மத்திய, மாநில அரசுகள் அறிவுறுத்தியபடி உள்ளன. அதனால்தான் மின்சார வாகனங் களை வாங்கி பயன்படுத்தும் ஆர்வம் மக்களிடம் பிரபலமாகி வருகிறது.

உலகம் முழுவதுமே தற்போது இ வாகனங்கள் அதிகரித்தபடி உள்ளது. இந்தியாவிலும் மின்சார வாகனங்களின் தேவை பெருகி கொண்டிருக்கிறது. இதில் நம்முடைய தமிழகம் மின்சார வாகனங்களின் உற்பத்தியில் முன்னிலையில் உள்ளது. இதற்காகவே பல நிறுவனங்கள் இ-வாகனங்களை உற்பத்தி செய்ய அதீத ஆர்வத்தை காட்டி வருகின்றன.

காரணம், பெட்ரோல், டீசல் வாகனங்களை போல புகை வெளியீடு இல்லாததால் காற்று மாசு மின்சார வாகனங்கள் மூலம் குறைகிறது. இதனால் நகரங்களில் சுவாசக் கோளாறுகள், ஆரோக்கிய பாதிப்புகள் குறைய வாய்ப்பு உள்ளது.

இதற்காகும் செலவும் மிகவும் குறைவாக இருக்கும்.. எரிபொருள் விலை உயர்வுகள் மின்சார வாகனங்களை பாதிக்காது. முக்கியமாக, இந்த வாகனங்களுக்கு வீட்டிலேயே அல்லது சார்ஜிங் ஸ்டேஷன்களில் குறைந்த செலவில் சார்ஜ் போட்டுக் கொள்ள முடியும். பராமரிப்பும் எளிதாக இருக்கும்.. ஏனென்றால், இன்ஜின் ஆயில், கிளட்ச் போன்ற தேய்மானம் தரும் பார்ட்ஸ்கள் இதில் இல்லை.

அதேபோல இந்த ரக வாகனங்களை இயக்கும்போது சத்தமும் பெரிதாக வராது. இதனால் ஒலி மாசு குறையும்.. இதுபோக அரசு தரும் சலுகைகள், பதிவு கட்டண குறைப்பு, வரி தள்ளுபடிகள், போன்றவையும் மின்சார வாகனங்களை வாங்குவதையும் பயன் படுத்துவதையும் மேலும் ஊக்குவிக்கின்றன.

எனவேதான், மக்களின் பயன்பாட்டை கருத்தில் கொண்டு, மீண்டும் ஒரு அதிரடி அறிவிப்பை தமிழக அரசு தற்போது வெளியிட்டுள்ளது.. தமிழக அரசின் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:

'மின்சார வாகனங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த வரி விலக்கு சலுகையானது இந்த ஆண்டுடன முடிவடைகிறது. இந்த நிலையில், இந்த 100 சதவீதம் வரி விலக்கானது வருகிற 2026 முதல் 2027-ம் ஆண்டு டிசம்பர் 31ந்தேதி வரை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகிறது.

இந்த வரி விலக்கு சலுகையானது, மத்திய மோட்டார் வாகன விதிகளின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து விதமான போக்குவரத்து வாகனங்கள் மற்றும் போக்குவரத்து அல்லாத தனிநபர் பயன்பாட்டு வாகனங்கள் என அனைத்து வகை மின்சார வாகனங்களுக்கும் பொருந்தும்.

தமிழ்நாட்டில் மின்சார வாகனங்களின் பயன்பாடு கணிசமாக அதிகரித்து வருகிறது. 2025-ம் ஆண்டில் இது சுமார் 7.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த வேகத்தைத் தக்கவைக்கவும், 'தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை 2023'-ன் நோக்கங்களை எட்டவும், வாகன உற்பத்தியாளர்கள் மற்றும் போக்குவரத்து ஆணையரின் கோரிக்கையை ஏற்று அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்த அறிவிப்பின் மூலம் மின்சார வாகனங்களை வாங்குவோர் சாலை வரி செலுத்துவதில் இருந்து முழுமையாக விலக்கு பெறுவர்' என்று அந்த அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புகார் நேரம்



திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் தாலுகா தூசி கிராம மெயின் ரோட்டில் பல்லாவரம் கிராமம் செல்லும் சாலையில் ஏராளமான நாய்கள் சுற்றித்திரிகின்றன. தெருக்களில் நாய்கள் தொல்லை இருப்பதால் நடந்தும், சைக்கிள், மோட்டார்சைக்கிள்களில் செல்வோரை நாய்கள் பின்னால் துரத்தி செல்கின்றன. பள்ளிகளுக்கு செல்லும் சிறுவர்-சிறுமிகளை நாய்கள் கடிக்க பாய்கின்றன. நாய்களை பிடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.



ஆரணி-வந்தவாசி நெடுஞ்சாலையில் கல்லேரிப்பட்டு ஊராட்சியில் பஸ் பயணிகள் நிழற்குடை உள்ளது. அங்கு இரவில் மதுபானம் குடிக்கும் நபர்கள் காலிப்பாட்டில்களை உடைக்கின்றனர். சமூக விரோத செயல்களும் நடக்கிறது. அங்கு பஸ் ஏற வந்து காத்திருக்கும் மக்களின் கால்களில் கண்ணாடிகள் குத்தி காயத்தை ஏற்படுத்துகின்றன. பஸ் பயணிகள் நிழற்குடை மது பிரியர்களின் கூடாரமாக மாறி வரும் அவல நிலையை ஊராட்சி நிர்வாகம் தடுத்து நிறுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

## 100 நாள் வேலை திட்டத்தை...

எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.;

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது:

2021 சட்டமன்ற பொதுத் தேர்தலின்போது, திமுக-வின் தேர்தல் அறிக்கையில், இன்றைய முதல்-அமைச்சர், அன்றைய எதிர்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின், திமுக ஆட்சிக்கு வந்தவுடன், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் 100 நாட்களிலிருந்து 150 நாட்களாக உயர்த்தப்படும் என்றும், மற்றும் ஊதியமும் உயர்த்தப்படும் என்று அறிவித்திருந்தார்

மக்களை ஏமாற்றி, வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வந்த பிறகு, கொடுத்த வாக்குறுதியை இன்றுவரை நிறைவேற்றவில்லை. அவர் பதிவிட்டு இருந்த நீண்ட x தள பதிவில் ஏன் இதை பற்றிய எந்த குறிப்பும் இல்லை? இது போன்ற பச்சைதுரோகத்தை செய்துவிட்டு பச்சை துண்டு பற்றி பேச அவருக்கு என்ன அருகதை இருக்கிறது?

தற்போது மத்திய அரசு இந்த 100 நாள் வேலை திட்டத்தை 125 நாட்களாக உயர்த்த உத்தேசித்துள்ளதை வரவேற்கிறேன். எனினும் மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் பெயர் எவ்வித மாற்றமுமின்றி தொடர மத்திய அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

செய்தி மற்றும் விளம்பரம், சேகரிக்க சட்டமன்ற தொகுதி வாரியாக துடிப்புமிக்க இளைஞர்கள் தேவை!

ஆர்வம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்

Cell:
9443852805, 9943483046
Email:
seithineram@gmail.com



# நெட்டில் சுட்ட... வடை



## வந்தே பாரத் ரயில்.. நொந்தே போவீர்கள்..

வைகையும் பல்லவனும் சூப்பர் பாஸ்ட் ரயில்களாக தொடங்கப்பட்டபோது சென்னை எழும்பூருக்கும் திருச்சிக்கும் இடையே விழுப்புரம், விருத்தாச்சலம் ஆகிய இரண்டு ஊர்களில் மட்டுமே நின்று சென்றது..

அதனால் அந்த வழித்தடத்தில் இரண்டு ரயில்களுமே சூப்பர் ஸ்டார்களாக பார்க்கப்பட்டன. பிறகு ஆளாளுக்கு நிறுத்தங்களை கேட்க ஆரம்பித்தார்கள். இப்போது விழுப்புரத்திற்கு இடையே தாம்பரம் செங்கல்பட்டு மருவத்தூர் என மூன்று ஸ்டாப்பிங்.

அப்புறம் விருதாச்சலம் தாண்டி பெண்ணாடம், அரியலூர், லால்குடி, ஸ்ரீரங்கம், பொன்மலை என திருச்சிக்கு இடையே அஞ்சு ஸ்டாப்பிங். சூப்பர் பாஸ்ட்கள் கட்டை வண்டியான கதை இதுதான்.

இப்போது வந்தே பாரத்.. குறுகிய நேர பயணம் என்று சொல்லி எக்கச்சக்கமாக கட்டண வசூலிக்கிறார்கள். இன்னொரு பக்கம் கோவில்பட்டி விருத்தாசலம் என ஒவ்வொரு நிறுத்தங்களாக கூடுதலாக சேர்க்கிறார்கள்..

கொஞ்ச நாளில் சாதாரண எக்ஸ்பிரஸ் ரயில் போல அனைத்து இடங்களிலும் நின்று செல்ல போகிறது வந்தே பாரத்.

பல ஊர் பயணிகளுக்கு வசதி தான். ஆனால் எல்லாவற்றையும் கூட்டி கழித்து பார்த்தால் அதிக கட்டணத்தில், வந்தே பாரத் என ஒரு சராசரி எக்ஸ்பிரஸ் ரயில். அவ்வளவு தான்..

சோழர் பரம்பரையில் இன்னொரு எம்எல்ஏ' என்று அமைதிப்படை படத்தில் அமாவாசை கேரக்டர் சொல்கிற மொமெண்ட்..




## திருவள்ளுவரே கன்பியூஸ் ஆகியிருப்பாரு...

திருநெல்வேலி ஜங்சன் திருவள்ளுவர் ஈரடுக்கு மேம்பாலத்தில் நெடுஞ்சாலை துறையினர் எழுதி வைத்துள்ள திருக்குறள் அனைத்தும் பிழைகளுடன் இருப்பதாக தமிழ் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும் வரைபவருக்கு திருக்குறள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அதை எழுதிக் கொடுத்து இருப்பவர் சரிபார்த்திருக்க வேண்டாமா... என தமிழ் ஆர்வலர்கள் கேள்வி...

## வரலாற்றில் ஜனவரி மாதம்

ஜனவரி மாதம், ரோமானியக் கடவுள் ஜானஸ் பெயரால் அழைக்கப்படுகிறது, இது ஆண்டின் முதல் மாதமாகும், மேலும் வரலாற்றில் பல முக்கிய நிகழ்வுகளைக் கொண்டுள்ளது: அமெரிக்காவில் அடிமைத்தனத்தை ஒழித்த அடிமைத்தன விடுதலைப் பிரகடனம் (1863), இந்திய குடியரசு தினம் (1950), பிரிட்டனிடமிருந்து பர்மா சுதந்திரம் (1948), ஐபோன் அறிமுகம் (2007), மற்றும் ஹிட்லர் ஜெர்மனியின் அதிபரானது (1933) போன்றவை குறிப்பிடத்தக்கவை, மேலும் பல உலக நிகழ்வுகளுக்கும், தேசிய தினங்களுக்கும் ஜனவரி மாதம் சாட்சியாக உள்ளது.

ஜனவரி 1:1863: அமெரிக்காவின் அடிமைத்தன விடுதலைப் பிரகடனம் நடைமுறைக்கு வந்தது.

1950: இந்தியா குடியரசு நாடாக மாறியது (குடியரசு தினம்).

ஜனவரி 4: 1948: பர்மா (மியான்மர்) பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றது.

ஜனவரி 9: 2007: ஸ்டீவ் ஜாப்ஸ் முதல் ஐபோனை அறிமுகப் படுத்தினார்.

ஜனவரி 15: 1559: எலிசபெத் ஞு இங்கிலாந்தின் அரசியாக முடிசூடினார்.

ஜனவரி 22: 1901: விக்டோரியா மகாராணி இறந்தார்.

ஜனவரி 26: குடியரசு தினம் (இந்தியா).

ஜனவரி 30: 1933: அடால்ஃப் ஹிட்லர் ஜெர்மனியின் அதிபராக பதவியேற்றார்.

ஜனவரி 31: 1606: கய் ஃபாக்ஸ் இறந்தார் (பிரிட்டனில்).

இந்தியாவில் ஜனவரி மாத முக்கியத்துவம்:

ஜனவரி 9: பிரவாசி பாரதிய திவாஸ் (வெளிநாடு வாழ் இந்தியர் தினம்).

ஜனவரி 12: தேசிய இளைஞர் தினம் (சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள்).

ஜனவரி 26: குடியரசு தினம் (இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்).

366 அலமானி எனப்படும் செருமனிய ஆதிகுடிகள் முற்றாக உறைந்திருந்த ரைன் ஆற்றைக் கடந்து உரோமை முற்றுகையிட்டனர்.

533 மெர்க்கூரியசு மூன்றாம் ஜான் என்ற பெயரில் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் புதிய பெயர் ஒன்றைப் பெற்றது இதுவே முதல் தடவையாகும்.

1492 எசுப்பானியாவில் முசுலிம்களின் ஆளுகைக்குட்பட்ட கடைசி நகரமான கிரனாதா சரணடைந்தது.

1757 கல்கத்தாவை பிரித்தானியர் கைப்பற்றினர்.

1777 அமெரிக்கப் புரட்சிப் போர்: அமெரிக்கப் படைகள் சியார்ச் வாசிங்டன் தலைமையில் இட்ரென்டன் அருகே நடந்த சமரில் பிரித்தானியப் படைகளை பின்வாங்கச் செய்தன.

1782 பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி அட்மிரல் எட்வர்ட் ஹியூஸ் தலைமையில் இந்தியாவில் இருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

1788 ஜோர்ஜியா ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டு அதன் 4வது மாநிலமாக இணைந்தது.

1791 வடமேற்கு இந்தியப் போர்: ஒகைய்யோ மாநிலத்தில் குழந்தைகள் உட்பட குடியேற்றவாசிகள் 14 பேரை அமெரிக்க இந்தியப் பழங்குடிகள் படுகொலை செய்தனர்.

1818 பிரித்தானியக் குடிசார் பொறியாளர்கள் நிறுவனம் நிறுவப்பட்டது.

1893 வட அமெரிக்காவில் தொடருந்துப் பாதைகளில் நேரத்தை அளவிடும் குரோனோமீட்டர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1905 உருசிய-சப்பானியப் போர்: உருசியக் கடற்படையினர் சீனாவின் போர்ட் ஆதரில் சப்பானியரிடம் சரணடைந்தனர்.

1920 ஐக்கிய அமெரிக்காவின் பல நகரங்களில் 6,000 இற்கும் அதிகமான கம்யூனிஸ்டுகள் என சந்தேகிக்கப்படுவோர் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி சிறை வைக்கப்பட்டனர்.

1921 எசுப்பானியாவின் சாண்டா இசபெல் கப்பல் மூழ்கியதில் 244 பேர் கொல்லப்பட்டனர்.

1941 இரண்டாம் உலகப் போர்: வேல்ஸில் கார்டிஃப் என்ற இடத்தில் லாண்டாஃப் தேவாலய ஜெர்மனியரின் குண்டுவீச்சில் பலத்த சேதம் அடைந்தது.

1942 இரண்டாம் உலகப் போர்: மணிலா சப்பானியப் படைகளால் கைப்பற்றப்பட்டது.

1945 இரண்டாம் உலகப் போர்: செருமனியில் நியூரம்பெர்க் நகரத்தின் மீது கூட்டுப் படைகள் குண்டுகளை வீசின.

1954 பத்மசிறீ, பத்மபூசண், பத்மவிபூசன் விருதுகளை இந்திய அரசு அறிமுகப்படுத்தியது.

1955 பனாமாவின் அரசுத்தலைவர் ஒசே அன்ரோனியோ ரெமோன் படுகொலை செய்யப்பட்டார்.

1959 சந்திரனை நோக்கிய முதலாவது விண்கலம் லூனா 1, சோவியத் ஒன்றியத்தால் விண்ணுக்கு ஏவப்பட்டது.

1963 வியட்நாம் போர்: வியட் கொங் படைகள் தமது முதலாவது முக்கிய வெற்றியைப் பெற்றது.

1971 கிளாஸ்கோவில் காற்பந்தாட்ட அரங்கு ஒன்றில் இடம்பெற்ற விபத்தில் சிறுவர்கள் உட்பட 66 பேர் உயிரிழந்தனர்.

1974 ஒப்பெக் தடையை அடுத்து, பெட்ரோல் சேமிப்புக்காக, வாகனங்களுக்கான 55 மை/மணி என்ற உச்ச வேகத்தை அமெரிக்க அரசுத்தலைவர் ரிச்சர்ட் நிக்சன் அறிவித்தார்.

1975 பீகார், சமஸ்திபூர் நகரில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் ரெயில்வே அமைச்சர் லலித் நாராயண் மிசுரா படுகாயமடைந்தார்.

1976 தெற்கு வடகடல் கரைகளில் பலத்த காற்று வீசியதில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 82 பேர் உயிரிழந்தனர்.

1978 பாக்கித்தான், முல்தான் நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீது பாதுகாப்புப் படையினர் சுட்டதில் 200 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

1982 சோமாலிய அரசுக்கு எதிரான தமது முதலாவது இராணுவ நடவடிக்கையை சோமாலிய தேசிய இயக்கம் தொடங்கியது. சோமாலியாவின் வடபகுதியில் அரசியல் கைதிகளை விடுவித்தனர்.

## ரோட்டரி நேரம்

### சிறப்பு குழந்தைகளுடன் ரோட்டரி சங்கங்கள் நடத்திய புத்தாண்டு கொண்டாட்டம்

ரோட்டரி கிளப் ஆப் திருச்சி நெக்ஸ்ட் ஜென், ரோட்டரி கிளப் திருச்சி டைமண்ட் சிட்டி குயின்ஸ், ரோட்டரி கிளப் திருச்சி ரிவர் டவுன், ரோட்டரி கிளப் திருச்சி டைனமிக் சங்கங்கள் இணைந்து ஜெயா சிறப்பு பள்ளியில் சிறப்பு குழந்தைகளுடன் புத்தாண்டு கொண்டாட்டம் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக உறையூர் பெனிபிட் அண்ட் நிதியின் இயக்குனர் ரோட்டரி கிளப் ஆப் திருச்சி டைமன் சிட்டியின் முன்னாள் தலைவர் ரொட்டேரியன் சச்சின் கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் ரோட்டரி கிளப் திருச்சி லட்சியம் தலைவர் ரொட்டேரியன் அப்துல் ரஹீம் வரவேற்றார் ரோட்டரி கிளப் திருச்சி டைனமிக் தலைவர் ரொட்டேரியன் சுதா அவர்கள் ரோட்டரி பிரார்த்தனை செய்தார்.



செயலாளர் ரொட்டேரியன் சலீமா நான்கு வழி சோதனை எடுத்துரைத்தார். ரோட்டரி கிளப் திருச்சி டைமண்ட் சிட்டி குயின்ஸ் தலைவர் ரொட்டேரியன் மாரி கண்ணு நன்றி உரை கூறினார். குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டு நினைவு பரிசு வழங்கப்பட்டது இதில் 35க்கும் மேற்பட்ட குழந்தைகளும் அனைத்து சங்க தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்.

### ரோட்டரி கிளப் திருச்சி நெஸ்ட் ஜென், பட்டர்பிளை டைமண்ட் சிட்டி, குயின்ஸ் மற்றும் டைனமிக் ரோட்டரி சங்கம் இணைந்து பீனிக்ஸ் சிறப்பு பள்ளியில் நடத்திய கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

திருச்சியில் ரோட்டரி சங்கங்களான திருச்சி நெக்ஸ்ட் ஜென், திருச்சி டைமன் சிட்டி குயின்ஸ், திருச்சி ரிவர் டவுன், திருச்சி டைனமிக் உள்ளிட்ட ரோட்டரி சங்கங்கள் இணைந்து பீனிக்ஸ் சிறப்பு பள்ளியில் கிறிஸ்மஸ் கொண்டாட்ட நிகழ்வை நடத்தியது. இதில் சிறப்பு விருந்தினராக ரோட்டரி இன் மீடியா பப்ளிசிட்டி ஆபிஸர் ரொட்டேரியன் ஏ.கே.எஸ் சீனிவாசன் கலந்து கொண்டார்.



சிறப்பு அழைப்பாளராக ரொட்டேரியன் சுபா பிரபு மாவட்ட ஆளுநர் கலந்து கொண்டார். நிகழ்ச்சியின் தொடக்கமாக ரோட்டரி கிளப் திருச்சி டைமண்ட் சிட்டி குயின்ஸ் தலைவர் ரொட்டேரியன் மாரி கண்ணு ரோட்டரி இறைவணக்கம் சொன்னார்.

ரோட்டரி நான்கு வழி சோதனை ரோட்டரி கிளப் திருச்சிராப்பள்ளி பட்டர்பிளேஸ் தலைவர் ரொட்டேரியன் நித்தியா அவர்கள் வழிமொழிந்தார். ரோட்டரி கிளப் ஆப் திருச்சி நெக்ஸ்ட் ஜென் தலைவர் ரொட்டேரியன் அப்துல் ரஹீம் அனைவரையும் வரவேற்றார். பீனிக்ஸ் சிறப்பு பள்ளியின் தாளாளர் ரொட்டேரியன் ஜானகி ராஜசேகர் வாழ்த்துரை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட சிறப்பு குழந்தைகள் கலந்து கொண்டு நடனம் மாறுவேட போட்டி உள்ளிட்ட போட்டிகளில் கலந்து கொண்டு அவர்களை திறமைகளை வெளிப்படுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் ரோட்டரி கிளப் திருச்சி நெக்சன் செயலாளர் கோபி கிருஷ்ணன் ரோட்டரி கிளப் திருச்சிராப்பள்ளி பட்டர்பிளை செயலாளர் ரேவதி ரோட்டரி கிளப் திருச்சி பொருளாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

### தண்ணீர் அமைப்பு சார்பில் நடைபெற்ற 2026 புத்தாண்டு கொண்டாட்டம்

தண்ணீர் அமைப்பு சார்பில் 2026 ஆங்கிலப் புத்தாண்டு முதல் நாளில் பொன்மலைப்பட்டி மற்றும் கொட்டப்பட்டு பகுதியில் உள்ள மாணவர்களுக்கு வீடுகளுக்குச் சென்று துணிப்பை விழிப்புணர்வு மற்றும் மரக்கன்றுகள், புத்தக வாசிப்புடன் புத்தாண்டு கொண்டாடப்பட்டது.



வளரும் இளைய தலைமுறையினரிடம் புவி பந்தைக் காத்திட நெகிழிப்பையைத் தவிர்த்து துணிப்பை கையில் எடுக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பிறந்துள்ள புத்தாண்டில் ஒவ்வொரு மாணவர்களும் வீட்டில் மரக்கன்றுகளை நட்டு வளர்க்க வேண்டும் ,பசுமை பரப்பை அதிகரிக்க வேண்டும், காற்று மாசுபாட்டைக் குறைக்க வேண்டும் என்று உறுதிமொழி ஏற்கப்பட்டது.

பூமி பந்தைக் காத்திட நெகிழிப்பை தவிர்த்து துணிப்பையை கையில் எடுக்க வேண்டும் என்ற உறுதிமொழி ஏற்கப்பட்டது.

புவி வாழ்வதற்கான ஒரே ஆதாரம் எனவே அவற்றை நாம் பாதுகாக்க வேண்டும் அடுத்த தலைமுறைக்கும் அவற்றை பசுமை பரப்போடு வழங்க வேண்டும் அதற்கு மரக்கன்றுகளை அதிகமாக நட்டு வளர்க்க வேண்டும்

புத்தாண்டு முதல் வீட்டின் பயன்பாட்டில் தனி மனிதர்களும் பொதுவெளியிலும் துணிப்பைகளை கையில் எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் கடைவீதிக்கு செல்லும் பொழுது பொருட்கள் வாங்கும் பொழுதும் இறைச்சி வாங்கும் பொழுதும் செல்லும் இடங்களில் எல்லாம், உணவு கடைக்கு செல்லும் பொழுதும் துணிப்பையை கையில் எடுத்துச் செல்ல வேண்டும் பாத்திரங்கள் கையில் எடுத்துச் செல்ல வேண்டும் நெகிழிப்பை தவிர்க்க வேண்டும் என்ற உறுதிமொழி ஏற்கப் பட்டது.

அத்துடன் வாசிப்பு பழக்கத்தை வளரும் தலைமுறை தொடர வேண்டும் என்பதற்காக அனைத்து மாணவர்களுக்கும் நூல் வழங்கப்பட்டது வாசிப்புடன் புத்தாண்டு, சூழலைப்பாதுகாக்க வேண்டும் என்று புத்தாண்டு, பசுமை பரப்பை அதிரிக்க வேண்டும் என்ற புத்தாண்டு, பூமிப்பந்தை பேணி காக்க வேண்டும் என்ற உறுதி மொழியோடு புத்தாண்டு கொண்டாடப்பட்டது .

இந்நிகழ்விற்கு தண்ணீர் அமைப்பு செயல் தலைவர் திரு கே .சி .நீலமேகம் தலைமை வகித்தார். தண்ணீர் அமைப்பு செயலாளர் பேராசிரியர் கி. சதீஷ்குமார் முன்னிலை வகித்து உறுதி மொழியை மாணவரிடம் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து மரக் கன்றுகள் மற்றும் துணிப்பைகள், நூல்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது .

இந்நிகழ்வில் சிலம்பம் மன்னை மகாலிங்கம் சிலம்பம் ஆசான் பிரேம் குமார், சிலம்ப மாணவர்கள், தேசிய துப்பாக்கி சுடும் வீராங்கனை சுகித்தா மற்றும் சுஜித் சிலம்பம் இளையோர உள்ளிட்டோர் மாணவர்கள் பெற்றோர்கள் பொதுமக்கள் பங்கேற்றனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை மாவட்ட தொழில் மையம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பில் நடைபெற்ற கடனுதவி வழங்கும் முகாமில் 149 பயனாளிகளுக்கு ரூபாய் 6.33 கோடி மதிப்பீட்டில் தொழில் முனைவோருக்கான கடனுதவி மற்றும் கல்விக் கடன் உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் இ.ஆ.ப வழங்கினார். உடன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பழனி நாடார் கலந்து கொண்டனர்.

# லட்சியம் குழுமம் சார்பாக நடைபெற்ற ஐம்பெரும் விழா!

திருச்சியில் கடந்த 27.12.2025 அன்று சனிக்கிழமை காலை 10 மணி அளவில் பிக் ஸ்டூடியோ அரங்கத்தில் ஐம்பெரும்விழா சிறப்பாக நடைபெற்றது.

லட்சியம் படைப்பாளர் களம் சார்பில் 7வது மாத வாழ்வியல் முன்னேற்ற பயிலரங்கம், லட்சியம் வெல்லும் மாத இதழ் மற்றும் செய்தி நேரம் மாதம் இருமுறை இதழ் செய்தியாளர்கள் அனைவருக்கும் 2026 ம் வருடத்தின் புதிய அடையாள அட்டை வழங்குதல், முத்தாய்ப்பாக செய்தி நேரம் டெய்லி டாட் காம் என்ற வலைதளம் துவக்கம், 2026 ஆம் வருடத்திற்கான காலண்டர் அறிமுகம் தொடர்ந்து சிறப்பாக பணியாற்றிய செய்தியாளர்களுக்கு பொறுப்பு உயர்வு வழங்கி பாராட்டும் நிகழ்வு என ஐம்பெரும் விழாவாக நடைபெற்றது.

பேராசிரியர். முனைவர். ரவீந்திரன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிரித்துக்கொண்டே ஜெயிப்போம் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். மேலும் ஸ்ரீ செல்வ பந்தம் குழுமத்தின் நிறுவனர் திரு.எஸ்.பி.மாரிமுத்து அவர்கள் செய்தி நேரம் வலைதளத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

லட்சியம் குடும்பத்தின் தலைவர் பேராசிரியர் திரு. சதாசிவம் அவர்கள் செய்தியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கி பேருரை ஆற்றினார்.

செய்தி நேரம் இதழின் இணை ஆசிரியர் திரு. ஐசக் அருள்ராஜ் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

தொடர்ந்து லட்சியம் படைப்பாளர் விருது நட்சத்திரம் அறக்கட்டளை இயக்குனர் திருமதி. பீயட்ரிஸ் வனஜா அவர்களுக்கும் மற்றும் பிச்சாண்டார் கோயில் அரசு பள்ளி தலைமை ஆசிரியாராக பணியாற்றி வரும் திரு. ரவிச்சந்திரன் அவர்களுக்கும் வழங்கப் பட்டது.

நிகழ்வில் படைப்பாளர் களம் சார்பாக அதன் கௌரவ தலைவர்கள் டாக்டர் யோகநாதன், திரு. பொ. ஜெயபாலன், கவிஞர் பொன்மலர் மலர்கொடி, திரு. ஸ்ரீதர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டை நிர்வாக ஆசிரியர் திரு. மணிகண்டன், துணை நிர்வாக ஆசிரியர் திருமதி. ஜனனி அழகிரி, சிறப்பு செய்தியாளர் திரு. சேதுராமன், ஆலோசகர் திரு. முகமது ஜியாவுதீன் ஆகியோர் செய்திருந்தனர்.

லட்சியம் வெல்லும் இதழின் இணை ஆசிரியர் திரு. சுரேஷ் ஆப்ரகாம், துணை ஆசிரியர் திரு. சென்னை சிவக்குமார் ஆறுமுகம், சிறப்பு ஆசிரியர் திரு. சதீஷ்குமார், செய்தி நேரம் இதழின் உதவி ஆசிரியர் திரு. குமரேசன், துணை ஆசிரியர் திரு. வேல்முருகன், சிறப்பு செய்தியாளர் திரு. ஏ. பொ. சுதாகர், தலைமை நிருபர்கள் திரு. முத்துக்குமார், திரு. சிவா@கென்னடி மற்றும் திரு. செந்தில்குமார் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் மாவட்டச் செய்தியாளர்கள், தாலுகா செய்தியாளர்கள், பகுதி செய்தியாளர்கள் கலந்து கொண்டு அடையாள அட்டையை பெற்றுக் கொண்டனர். மதிய உணவுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.



# பெண் ஓட்டுநர்களுக்கான முதலுதவி விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருச்சிராப்பள்ளி புனித சிலுவை கல்லூரி (தன்னாட்சி), பாரதிதாசன் பல்கலைக்கழக இணைப்பு பெற்றதும், UGC நிதியுதவி பெறும் மகளிர் மையம் சார்பில்,E-Auto Women Drivers’ First Aid Kit: Your Roadside Safety Companion” என்ற தலைப்பில் பெண்கள் இ-ஆட்டோ ஓட்டுநர்களுக்கான முதலுதவி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சி கடந்த 11.12.2025 (வியாழக்கிழமை) காலை 11.00 மணிக்கு நடைபெற்றது. சாலைப் பாதுகாப்பு, அவசர காலங்களில் முதலுதவி வழங்கும் முறைகள், பெண்கள் ஓட்டுநர்களின் பாதுகாப்பு மற்றும் தன்னம்பிக்கை வளர்ச்சி ஆகியவை குறித்து இந்த நிகழ்ச்சியில் விளக்கமளிக்கப் பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு புனித சிலுவை கல்லூரி (தன்னாட்சி) முதல்வரும் மகளிர் மைய இயக்குநருமான மதிப்பிற்குரிய ரெவ். (Sr.) டாக்டர் ராஜகுமாரி. ப அவர்கள் தலைமை தாங்குகினார்.

இந்நிகழ்ச்சியை டாக்டர் ப. பிரிஷூலா, உதவிப் பேராசிரியரும் ஒருங்கிணைப் பாளருமான, மகளிர் மையம் (UGC நிதியுதவி), புனித சிலுவை கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி அவர்கள் ஒருங்கிணைத்து நடத்துகின்றார்.

பெண்கள் இ-ஆட்டோ ஓட்டுநர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் நடைபெறும் இந்நிகழ்ச்சி, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக்கிய முயற்சியாக அமைந்து உள்ளது.





செய்திகளை உடனுக்குடன் படித்திட www.seithineramdaily.com இணையதளத்தில் இணைந்திடுங்கள்

வெற்றிகரமாக மாதமிருமுறை வெளி வந்து கொண்டிருக்கும் செய்தி நேரம் இதழுக்கு

**விளம்பர ஏஜெண்டுகள் தேவை!**

தொடர்புக்கு: ஆசிரியர், செல்: 94438 52805

பல்வேறு அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வு செய்திகளை தாங்கி வெளிவரும் நமது **லட்சியம் வெல்லும்** மாத இதழ் ஒவ்வொரு மாதமும் உங்கள் இல்லம் தேடி வர இப்பொழுதே சந்தாதாரராகுங்கள்

சந்தா தொகையினை, நேரடியாக வங்கி கணக்கிலோ, DD-யாகவோ அல்லது G-pay மூலமாகவோ செலுத்தலாம்

வருட சந்தா ரூ. 240 மட்டுமே!

A/C NAME: LATCHIYAM VELLUM
A/C No: 6807683907 (current account)
IFSC : IDIB000C067
Indian bank : Trichy crowford branch
Gpay : 9943483046 (LATCHIYAM TV)



2/48சி, சம்பூர்தி காம்ப்ளக்ஸ்,
2-வது தளம், பொன்னகர்,
திருச்சி – 620 001
செல்: 9443852805









செய்தி நேரம்

மலர் 4 இதழ் 21 ஜனவரி 1-15, 2026

ஆசிரியர்-வெளியீட்டாளர்
பேரா. சு.சதாசிவம் M.A., B.Ed., M.Phil.,

நிர்வாக ஆசிரியர்
A.மணிகண்டன்

இணை ஆசிரியர்
A.ஐசக் அருள்ராஜ்

உதவி ஆசிரியர்
S.குமரேசன்

துணை ஆசிரியர்
S.வேல்முருகன்

துணை நிர்வாக ஆசிரியர் & விளம்பர மேலாளர்
ஜனனி அழகிரி

நிருபர்கள்
பிளட் A.ஷாம், G.இமானுவேல், S.தினேஷ், S.முருகபெருமாள்

கௌரவ சட்ட ஆலோசகர்:
Dr. ரெ. ராமச்சந்திரன்

சட்ட ஆலோசகர்கள்:
வழக்கறிஞர் R.சரவணன் M.L., உயர்நீதிமன்றம் சென்னை
மூத்த வழக்கறிஞர் J.மதியழகன் B.A.B.L.,

பக்க வடிவமைப்பு: Rathna Graphics

செய்தி நேரம்
2/48 சி, சம்பூர்தி காம்ப்ளக்ஸ், 2வது தளம், பொன்னகர், திருச்சி-620 001.
Cell: 94438-52805, 99434-83046
E Mail: seithineram@gmail.com


Printed by S.Balasubramanian and Published by S.Sathasivam on behalf of S.Sathasivam and Printed at Sankarji Computer Graphics Printer, No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk), Karur (District)-639 105. and Published at No.5/185, Thiruvalarchipatti, Airport (Post), Tiruchirappalli-620 007. E-mail : seithineramtry@gmail.com

Editor: S.SATHASIVAM